புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மனாமியங்கள் புதினத்தில் இசுலாமியப் பெண்களின் நிலை

க. லெட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு நடுவம்,
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை – 625002.

முனைவர் ஜெ. நிர்மலா தேவி,
ஆய்வு நெறியாளர் & இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை – 625002.

ஆய்வுச்சுருக்கம்

சமயங்கள் பல பெயரால் காணப்பட்டாலும் அவை கட்டமைக்கும் கட்டுப்பாடுகளும், நெறிமுறைகளும் முழுக்க முழுக்கப் பெண்களை மையமிட்டே அமைந்துள்ளன எனலாம். ‘ஒழுக்கம்’ பெண்ணுக்கு மட்டுமே உரித்தான ஒன்றாகக் காணப்படுகிறது. பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரையறை எல்லாச் சமயத்திலும் எப்போதும் உண்டு. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற பண்புகள் பெண்ணிடம் அவசியம் இருக்கவேண்டியனவாக இன்றும் கருதப்படுகின்றது. ஓர் ஆண் எத்தனை நாட்கள் வெளியூரில் தங்கியிருந்தாலும் அவன் தன் கற்பை நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒரு பெண்ணோ ஒரு நாள் ஓர் இரவு வீட்டில் இல்லையென்றாலும் அவள் தன் கற்பை நிரூபித்தே ஆக வேண்டும். இறைவனின் அவதாரமாக பார்க்கப்படும் இராமனின் மனைவி சீதை கூடத் தீக்குளித்துத்தான் தன்னை நிரூபிக்க வேண்டியிருந்தது. எந்தச் சமயமும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. தீட்டுநாளில் பெண் கோவிலுக்குச் செல்லக்கூடாது என்பதும், தீட்டுநாளில் பெண் குரானைத் தொடக்கூடாது என்பவையும்கூட பிற்போக்குத் தனத்தையே காட்டி நிற்கின்றன எனலாம். பெண் வளரும்போதே புகுந்த வீட்டிற்குரிய தரமான பொருளாக வடிவமைக்கப்படுகிறாள். புகுந்த வீட்டில் அவள் விவரம் தெரிந்த பெண்ணாக இருக்க வேண்டும் என்பதற்காகவே பெண்கல்வியும் கூட அவளுக்கு அனுமதிக்கப்படுகிறது. சுருங்கக்கூறின் புகுந்தவீட்டின் பயிற்சிக்களமாகவே பெண்ணின் ‘பிறந்த வீடு’ திகழ்கிறது எனலாம்.

இன்று பெண்கள் பலதுறைகளில் முன்னேறிவிட்டனர், பணிக்குச் செல்கின்றனர் என்று கூறினாலும்கூட, பெண் அவளுக்கான வீட்டு வேலையைச் செய்துவிட்டு குடும்பத்தைக் கவனித்துவிட்டுப் பிறகுதான் பணிக்குச் செல்லமுடியுமென்ற சுதந்திரமே பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. பணி முடிந்து திரும்பிய பிறகும்கூட, அவள் சமைத்துதான் அனைவரும் உண்ண வேண்டும் என்கிற சூழலே நிலவுகிறது. இது சுதந்திரமாக வெளியில் காட்டப்பட்டாலும் இதுவும் அடக்குமுறையே. பருவத்தைக் கடந்தும் திருமணமாகாதவள் ‘முதிர்கன்னி’, திருமணமாகியும் குழந்தையில்லாதவள் ‘மலடி’, குழந்தையிருந்தும் கணவனில்லாதவள் ‘விதவை’ என்று இன்றும் பெண்ணைச் சுற்றி முள்வேலி கட்டுவதில் எல்லாச் சமூகமும் போட்டியே போடுகின்றன. பெண் எவ்வளவு பெரிய சிம்மாசனத்திற்குப் போனாலும் அவளின் குறையைத் தேடி ஏளனம் பேசும் சமூகம்தான் பெண் முன்னேற்றம் அடைந்ததாக நாடகமும் ஆடுகிறது.

பெண்கள் ஏணியில் ஏற்றப்பட்டாலும்சரி, ஓரத்தில் ஒடுக்கப்பட்டாலும் சரி உள்ளதை உள்ளவாறு கூறுவதில் இலக்கியங்கள் ஈடில்லாத சேவையாற்றுகின்றன எனலாம். அதுவும் ஒரு பெண் படைப்பாளி அவர் சார்ந்த சமூகத்தை மையமிட்டு எழுதும்போது அது உணர்வுகளுடைய நேர்த்தியான படைப்பாக வெளிவரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவ்வகையில் ‘மனாமியங்கள்’ புதினத்தில் இசுலாமியப் பெண்களின் நிலையைச் ‘சல்மா’ பதிவு செய்கிறார். புனைவுகளுக்கு விடுப்பு கொடுத்து, உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து எழுதப்பட்ட இந்த

புதினத்தின்வழி இசுலாமியப் பெண்களின் நிலையை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## முன்னுரை

எல்லாச் சமயங்களும் தமக்கெனச் சில விதிமுறைகளைக் கொண்டுள்ளன. இந்த விதிமுறைகள் அவை உருவாக்கபட்ட காலத்திற்கு உகந்தவையாக இருந்திருக்கலாம். காலம் செல்லச்செல்ல அவை மாற்றத்திற்குட்பட்டிருக்க வேண்டும் அல்லது கேள்விகளுக்குட்பட்டிருக்க வேண்டும். ஆனால் சமயப்பற்றாளர்கள் சமய விதிமுறைகளைக் கேள்விக்குட்படுத்த விரும்புவதில்லை. எனவே சமய விதிமுறைகளைக் கண்மூடித்தனமாக அப்படியே பின்பற்றுகின்றனர். பொதுவாகவே இந்த விதிமுறைகள் ஆண்களைக் காட்டிலும் பெண்களையே அதிகமாகக் கட்டுப்படுத்துகின்றன எனலாம். அதிலும் இசுலாமியச் சமயத்தில் பெண்களுக்கு அதிகமான கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சல்மாவால் எழுதப்பட்ட ‘மனாமியங்கள்’ புதினமானது இசுலாமியச் சமூகத்தில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளையும், அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் விளக்குகிறது. அவற்றை ஆராய்ந்து எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## ஆய்வு அணுகுமுறைகள்

ஒரு சமுதாயப் பின்பலத்தில் பிறக்கின்ற இலக்கியம் அந்தச் சமுதாயத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ புலப்படுத்துகிறது. அவ்வகையில் ‘மனாமியங்கள்’ புதினம் வெளிப்படுத்தும் இசுலாமியச் சமூகத்தை ஆராயுமிடங்களில் ‘சமூகவியல் அணுகுமுறை’ பின்பற்றப்பட்டுள்ளது. மேலும், மரபுவழியான ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் நிலையையும், அவர்களுக்கான உரிமைகளையும், உணர்வுகளையும் ‘மனாமியங்கள்’ புதினத்தின்வழி ஆராயுமிடத்தில் ‘பெண்ணியத் திறனாய்வு’ அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது.

## சங்க இலக்கியமும் சமய இலக்கியமும்

பெண்களால் தான் இவ்வுலகம் இயங்குகிறது எனலாம். ஆனால் இந்த ஆணாதிக்கச் சமூகமோ, எப்பொழுதும் பெண்ணைத் தன்னைச் சார்ந்து வாழ வேண்டியவளாகவே கட்டாயப்படுத்துகிறது. தொல்காப்பியம், சங்க இலக்கிய காலத்திலிருந்தே அறிவும் உரனும் ஆணுக்குரிய குணங்களென்றும், அச்சம், மடம், நாணம் பெண்களுக்குரியவை என்றும், தொழில் ஆண்களுக்கு உயிர் என்றும், கணவன் மனைவிக்கு உயிர் என்றும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. இவ்வெண்ணம் இனம், மொழி, சமூகம், சமயம் கடந்து எல்லா நிலையிலும் பொதுவாக உள்ளது. ”பெண்களின் இயற்கை குணாதிசயங்களில் ஒன்றாக “வெட்கம், நாணம், மடம், பயிர்ப்பு“ அவசியம் என்று கூறுவர். நாணமில்லாத பெண், பெண்ணாகவே மதிக்கப்படுவதில்லை” (பெண்களுக்கு.. இஸ்லாம் கூறும் ஆலோசனை, ப. 21) என்கிறது இசுலாம்.

## பெண்மையின் அங்கீகாரமே கணவன்

கணவனை இழந்த பெண் விதவையாகவும், கணவனைப் பிரிந்த பெண் வாழாவெட்டியாகவும் அனைத்துச் சமூகத்திலும் சித்தரிக்கப்படுகிறாள். ‘மனாமியங்கள்’ புதினத்தில் மெஹருன்னிசாவின் புகுந்தவீட்டில் அவளுக்குப் பிடித்ததை செய்யும் அளவிற்குக்கூட சுதந்திரம் இல்லாததை ”எனக்குப் பிடித்த எதையாவது செய்ய விட்டிருக்கிறானா? அவனுக்குப் பிடிக்காத எதையாவது செய்திருப்பதாக நினைவில்கூட இல்லை” (மனாமியங்கள், ப. 61) என்ற அவளின் நினைவுகள் எடுத்தியம்புகின்றன. மேலும் அவளின் கணவன் ‘ஹசன்’ இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறான். இதனால் அவனுக்குக் ‘குலா’ கொடுத்துவிட்டு அவனை விட்டுப் பிரிகிறாள். வாழாவெட்டியாக இருக்கும் பெண்ணைச் சமூகம் எப்படி நடத்தும் என்பது தெரிந்தும் அவனை விட்டுப் பிரியும் எண்ணமே அவளுக்கு அத்தனை வலியிலும் ஆறுதலாக இருப்பதை, ”அவனுடைய அடக்கு முறையிலிருந்தும் அண்மையிலிருந்தும் விலகி இருக்கப் போகிறோம் என்ற நினைப்பே அத்தனை வலியிலும் இதமாக இருந்தது” (மனாமியங்கள், ப. 25) எனும் விடுதலை வரிகள் புலப்படுத்துகின்றன.

அதுமட்டுமில்லாமல் கணவன் இறந்துவிட்டால் மனைவிக்குக் கிடைக்கும் இரக்கம்கூட அவள் வாழாவெட்டியாக இருந்தால் கிடைக்காது என்பதை ”விதவைக்காவது கொஞ்சம்

*பச்சதாதாபம் கிடைக்கும். அதுகூட வாழாவெட்டிக்குக் கிடைக்காது" (மனாமியங்கள், ப. 64) என்ற பர்வீனின் அனுபவ வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. இதிலிருந்து பெண்மையின் அங்கீகாரமே கணவன் தான் என்ற நிலை புலப்படுகிறது.*

*பெண்கல்வி*

*இசுலாமியச் சமூகத்தில் பெண்கல்வி என்பது சற்று பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. இச்சமூகத்தைப் பொறுத்தவரை பெண்கல்வியின் நோக்கம் என்பது சமயம் சார்ந்த அறிவைப் பெறுவதற்கு மட்டுமே, ஆண்கல்வியின் நோக்கமோ வெளிநாடு சென்று வேலை பார்ப்பதற்கு. மேலும், "ஒரு பெண்ணுக்குத் தேவையான கல்வி, குர்ஆன் முப்பது ஜூஸவும் (தொகுதிகளும்) ஓதியிருக்க வேண்டும். மௌலூது, தலைப்பாத்தியா தெரிந்திருக்க வேண்டும். தொழுகை முறைகளைப் படித்திருக்க வேண்டும். இதைவிட்டு ஆங்கிலம், விஞ்ஞானமெல்லாம் ஒரு பெண்ணுக்குத் தேவையில்லை." (இஸ்லாமியத் தமிழ்ப்புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் ப. 30) என்றே இச்சமூகம் கருதுவதாக 'அப்துல்சமது' கூறுகிறார். 'மனாமியங்கள்' புதினத்தில் சாஜிதா வயதுக்கு வந்தவுடன் அவளுடைய தந்தை அவளை பள்ளிக்கு அனுப்ப விரும்பவில்லை. மார்க்கக் கல்வியை மட்டும் பெற்றால் போதும் என எண்ணுவதை, "எம் பொண்ணு வயசுக்கு வந்துட்டா, படிக்க அனுப்ப மாட்டேன். ஏதாவது தப்புதண்டாவுக்கு போயிடுங்க, மதரஸாவுல ரெண்டு வருஷம் போட்டுட்டு இல்ம மரியாதய கத்துக்குடுத்து, இல்மு தெரிஞ்ச மாப்பிள்ளைக்கு கட்டிக் குடுத்துரணும்." (மனாமியங்கள், ப. 48) அவரின் கூற்று மெய்ப்பிக்கிறது. எனவே பெண்கள் இசுலாமியச் சமயத்தை வழிபடுவதற்குத் தேவையான கல்வி ஞானத்தை மட்டும் பெற்றால் போதும் என்றே இச்சமூகம் எண்ணுகிறது.*

*குழந்தைத் திருமணம்*

*பெண் எப்போது பூப்படைவாள் என காத்திருக்கும் சமூகம் அவள் பூப்படைந்தவுடன் அவளைத் திருமணம் செய்து கொடுக்கிறது. 'பூப்படைதல்' என்றால் என்ன என்றுகூட தெரியாத அந்தப் பெண் திருமண வாழ்க்கைக்குள் தள்ளப்படுகிறாள். 'மனாமியங்கள்' புதினத்தில் பர்வீன் விவரம் தெரியாத 14 வயதிலேயே திருமணம் முடித்துக் கொடுக்கப்படுகிறாள். "இவளுக்கு ஒன்றும் புரிகிற வயதில்லை. 14 வயதிருக்கும்போது கல்யாணம் முடித்துக் குப்பி வீட்டிற்குப் போனபிறகு..." (மனாமியங்கள், ப. 17) எனும் வரிகளில் காண முடிகிறது.*

*மறுமணம்*

*இசுலாமியப் பெண்களைப் பெரும்பாலும் குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து கொடுக்கின்றனர். இவ்வாறு திருமணம் செய்யப்படும் பெண்களின் வாழ்க்கை பல நேரங்களில் அவர்கள் வாழத் தொடங்குவதற்கு முன்பே முடிந்து விடுகிறது. இவ்வாறு முதல் வாழ்க்கையை இழந்த பெண்களுக்கு வயதான ஆண்களும், மனைவியை இழந்து குழந்தைகளுடன் இருக்கும் ஆண்களும் வாழ்க்கைதர முன்வருகின்றனர். திருமணமான பெண் கணவனுடன் ஒருநாள் கூட வாழ்க்கை நடத்தவில்லை என்றாலும் அவளுக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கை தருவதை பெரியத் தியாகமாகப் பிற ஆண்கள் கருதுகின்றனர். 'மனாமியங்கள்' புதினத்தில் பர்வீன் புகுந்தவீட்டாரால் 'மலடி' என்ற பட்டம் சூட்டப்பெற்று வாழாவெட்டியாகிப் பிறந்த வீட்டிற்கு வருகிறாள். இதனால் பர்வீனின் தாய் அவளை மறுமணம் செய்யச்சொல்லி அறிவுறுத்துகிறாள். ஆனால் பர்வீனோ அதற்கு துளியளவும் இடம்கொடுக்காமல் மறுப்பதை "ஒன்னைய மாதிரி வயசான ஒரு ஆளுக்கு ரெண்டாந்தாரமாகவோ, பொண்டாட்டி செத்து பிள்ளைகுட்டியோட இருக்கற ஒருத்தனுக்கு வீட்டில் வேலைக்காரியாவோ எனக்கு இருக்க முடியாது" (மனாமியங்கள், ப. 54) என்ற கோப வார்த்தைகள் எடுத்தியம்புகின்றன. பர்வீனின் தாயும்கூட வயதான ஆளுக்கு இரண்டாம் தாரமாக மணம் செய்தவள் என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது.*

*குழந்தைப்பேறு*

*கடவுள் கொடுக்கும் வரமே 'குழந்தைப்பேறு' ஆகும். இந்த வரம் கிடைப்பதில் சிலருக்குக் கால தாமதம் ஏற்படும். இந்தக் காலதாமதத்தை 'பெண்ணின் கஷ்ட காலம்' என்றும் வரையறுக்கலாம். இந்தக் காலதாமதத்தில் பெண் மட்டுமே கேள்விக்குட்படுத்தப்படுகிறாள்.*

பெண்ணுடைய வாழ்வின்முழுமையாகத் 'தாய்மை' பார்க்கப்படுகிறது. 'மனாமியங்கள்' புதினத்தில் பர்வீனுக்கு குழந்தைப்பேறு இல்லை. காரணம் அவள் கணவன் சாகுல் எனினும் 'மலடி' என்னும் பட்டத்தை அவளே சுமக்கிறாள். அதனால் ஊரில் எந்த நல்ல காரியத்திலும் அவளால் கலந்து கொள்ள முடியாது. "ஊரில் எந்த விசேஷங்களுக்கும் அவளால் போக முடியாது. அவர்கள் பார்க்கும் பார்வையின் பச்சாதாபமும் அவமரியாதையும் கொடும் நரகம். வீடாவது எந்த இறுக்கமும் அற்று தன்னுடையதாக இருப்பது போதுமென்றிருந்தது.." (மனாமியங்கள் ப. 37) எனும் வரிகளில் பர்வீனின் மனக்காயத்தைச் 'சல்மா' பதிவு செய்கிறார்.

இத்தா

இசுலாமியச் சமூகம் கணவன் மனைவியை விட்டுப் பிரிய விரும்பினால் 'தலாக்' கொடுக்கலாம் என்றும், மனைவி கணவனை விட்டு பிரிய விரும்பினால் 'குலா' கொடுக்கலாம் என்றும் கூறுகிறது. ஆனால் இந்த இரண்டு நிகழ்வுகளிலும் பெண் 'இத்தா' இருக்க வேண்டும். 'தலாக்' பெற்ற பெண்ணோ, 'குலா' கொடுத்த பெண்ணோ நான்கு மாதம் பத்து நாட்கள் 'இத்தா' இருந்தே ஆக வேண்டும் என்கிறது இசுலாம். "ஒரு ஆண் தன் மனைவியை இழந்துவிட்டால் உடனேயே அவன் இன்னொரு திருமணம் செய்ய இஸ்லாம் அனுமதிக்கிறது. ஒரு பெண் தன் கணவனை இழந்து விட்டால் அவள் அடுத்த நாளே மறுமணம் செய்ய முடியாது. சில நாட்கள் திருமணத்தை ஒத்திப்போட வேண்டும். மறுமணத்தை ஒத்திப்போடும் காலமே இத்தா எனப்படுகின்றது." (பெண்களுக்கான இஸ்லாமிய சட்டங்கள், ப. 118) அதாவது பெண்ணின் மறுமணத்தை ஒத்திப்போடும் காலமாக 'இத்தா' காணப்படுகிறது.

பெண் ஒப்பனை ஏதும் செய்யாமல் வெளியே செல்லாமல் சுவையாகச் சாப்பிடாமல், பிற ஆடவரின் கண்களில் படாமல் இந்த நாட்களைக் கடந்தே ஆக வேண்டும். இந்த 'இத்தாகாலம்' முடிந்தபிறகு அவள் மறுமணம் செய்து கொள்ளலாம். 'மனாமியங்கள்' புதினத்தில் ஹசன் முதல் மனைவி இருக்கும் போதே இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறான். இது பிடிக்காமல் முதல் மனைவி மெஹர் அவனுக்கு 'குலா' கொடுக்கிறாள். அவனைப் பழிவாங்கும் நோக்கில் இவளும் மறுமணம் செய்து கொள்ள நினைக்கிறாள். இதனால் அவள் 'இத்தா' இருக்க வேண்டும் என ஊர்த்தலைவர் அனிபா ஹஜ்ரத் கூறுகிறார். "குலா கொடுத்தபிறகு நான்கு மாதம் பத்துநாள் இத்தா இருந்தே ஆக வேண்டும் என்று அனிபா.." (மனாமியங்கள், ப. 45) என்ற அனிபா ஹஜ்ரத் கூறுகிறார். அதுபோலவே மெஹர் நான்கு மாதம் பத்து நாட்கள் இத்தாவை கடைபிடிக்கிறாள்.

ஆணாதிக்கம்

இசுலாமியச் சமயம் ஆண்களுக்கான சுதந்திரத்தைப் பெண்களைக் கட்டுப்படுத்துவதன்வழி வழங்குகிறது எனலாம். இசலாமியச் சமூகத்தில் ஓர் ஆண் மனைவி இருக்கும் போதே, தான் நினைக்கும் நேரத்தில் மற்றொரு திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் பெண்ணோ அப்படிச் செய்ய முடியாது. அதற்குச் சில விதிகளைப் பின்பற்றியாக வேண்டும். "ஒரு ஆண் தன் மனைவியை இழந்துவிட்டால் உடனேயே அவன் இன்னொரு திருமணம் செய்ய இஸ்லாம் அனுமதிக்கிறது. ஒரு பெண் தன் கணவனை இழந்து விட்டால் அவள் அடுத்த நாளே மறுமணம் செய்ய முடியாது. சில நாட்கள் திருமணத்தை ஒத்திப்போட வேண்டும்." (பெண்களுக்கான இஸ்லாமிய சட்டங்கள், ப. 118) என்ற வரிகள் ஆணாதிக்கத்தையே வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றன. மேலும் அவன் இன்னொரு திருமணம் செய்வதற்கு முதல் மனைவியிடம் அனுமதி கேட்கத் தேவையில்லை. "ஓர் ஆண் இரண்டாவது திருமணம் செய்ய நினைத்தால்... இரண்டாவது திருமணத்திற்கு முதல் மனைவியிடம் அனுமதி கேட்க வேண்டிய அவசியமில்லை என்று இஸ்லாம் சொல்கின்றது." (இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமை ப. 112) முதல் மனைவியிடம் கேட்காமலேயே இரண்டாம் திருமணம் மட்டுமல்ல மொத்தம் நான்கு திருமணங்களை ஆணுக்கு இசுலாமியச் சமயம் அனுமதிக்கிறது. "ஆம்பளை எப்படி இருந்தால் பொட்டச்சிக்கு என்ன, இஸ்லாத்தில நாலு கல்யாணம் செய்வது தப்பில்லைதானே" (மனாமியங்கள், ப. 29) என்ற ஹசனின் கூற்றின்வழி இதனை அறிய முடிகிறது. மேலும் இப்புதினத்தில் ஹசன் மற்றொரு திருமணம் செய்ததற்காக அவனுடைய முதல் மனைவி மெஹர் அவனுக்கு 'குலா'(பெண் ஆணுக்குக் கொடுக்கும் மணமுறிவு) கொடுக்கிறாள். இதனால் ஆத்திரமடைந்த ஹசன் "ஆம்பள ஒரு விஷயத்த பண்ணிவிட்டான் என்பதற்காக ஒரு பொட்டச்சியும் அதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கலாமா, எவ்வளவு கூதித் திமிர் இருந்தால்

இதைச் செய்வாள் என்று மனதிற்குள் கறுவியவன்..'' *(மனாமியங்கள், ப. 170)* என்று அவளைத் திட்டுகிறான். பெண்கள் 'குலா' கொடுக்கலாம் என்ற ஒரு வாய்ப்பு இசுலாமியச் சமூகத்தில் கொடுக்கப்பட்டிருந்தும் அதை சுதந்திரமாக பயன்படுத்தும் உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதையே இந்நிகழ்வு வெளிக்காட்டுகிறது.

பெண்களின் உணர்வுகள்

'மனாமியங்கள்' புதினத்தில் 'ஆமினா' பார்வையற்றவளாகக் காணப்படுகிறாள். அதனால் அவளைத் திருமணம் செய்ய யாரும் முன்வரவில்லை. இருந்தும் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் ஏங்குவதை, ''இளம் பருவத்தில் தூக்கம் வராத பொழுதுகளில் தன் உடலைத் தானே தொட்டுப் பார்க்கிற ஆசை வரும்போதெல்லாம் யாரும் பார்க்கிறார்களா என்பதை அறிந்துகொள்ள முடியாத நிலையில் தனது ஆசைகளை, வேட்கைகளை மறைத்துக்கொள்ள ரொம்பவும் பிரயாசைப்படுவாள். குளிப்பதற்குக் கதவில்லாத கொல்லைக்குள் இருக்கும் கொஞ்ச நேரம், சோப்புப் போடுகிற பாவனையில் முலைகளைத் தொட்டுப் பார்த்துக் கொள்வாள். தன் உடலின்மீது அவளுக்கே தீராத வேட்கை வரும். யாராவது ஆணின் கைகளில் இந்த உடலைக் கிடத்தினால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்துகொள்வாள்'' *(மனாமியங்கள், ப. 132)* என்ற உணர்ச்சி மிகுந்த வார்த்தைகள் எடுத்துரைக்கின்றன. மேலும் கணவனைப் பிரிந்த பர்வீனும் ஆண் அதிகாரியிடம் தொலைபேசியில் காரணமே இல்லாமல் பேசுவதை வழக்கமாகக் கொள்கிறாள். அதன்வழி கிடைக்கும் சிறு நிறைவானது உடல்பசியைத் தீர்த்துக்கொள்ள போதுமானதாக இருப்பதை, ''இந்த அற்ப சந்தோஷம் தேவையா என்கிற கேள்வியும் ஏன் கூடாது என்கிற மனநிலையும் ஒரே சமயத்தில் தோன்றின..... அது ஒன்றும் நிரந்தரமில்லை. வேறு எந்த ஒரு இடத்திற்கும் அது போகப் போவதில்லை என்றாலும், அப்படி ஒரு கிளர்ச்சி தன் உடலுக்கும் மனதிற்கும் வேண்டியிருந்தது என்பதைத் தயக்கமில்லாமல் ஒப்புக்கொள்ளவே செய்தாள்'' *(மனாமியங்கள், ப. 181)* என்ற அவளின் மனவோட்டம் வெளிப்படுத்துகிறது. பெண்மைக்கே உரிய மன உணர்வுகளைத் தடுக்கவும் முடியாமல் தவிர்க்கவும் முடியாமல் திண்டாடுவதை இங்கே காணமுடிகிறது.

'மனாமியங்கள்' புதினத்தில் பெண்கள்

நினைத்ததை படிக்க முடியாமல் மகள் சாஜிதா, பிடித்ததை செய்ய முடியாமல் தங்கை பர்வீன், திருமணமாகாமல் தவிக்கும் நன்னி ஆமினா, திருமணமாகியும் வாழ்க்கையை இழக்கும் மனைவி மெஹருன்னிசா, மகனின் பேச்சை மீறமுடியாமல் தன் விருப்பப்படியும் வாழ முடியாமல் தவிக்கும் தாய் சுபைதா என்று இப்புதினம் காட்டும் அத்தனை பெண்களும் 'ஹசன்' என்ற ஓர் ஆணின் கட்டுப்பாட்டில் இயங்கும் கைப்பாவைகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளனர்.

முடிவுரை

எல்லாச் சமயங்களும் பெண்ணைக் கட்டுப்படுத்துவதன்வழி சமயத்தை நிலைநாட்ட முயல்கின்றன. இதற்கு இசுலாமியச் சமயமும் விதிவிலக்கல்ல என்பதையே 'மனாமியங்கள்' புதினம் எடுத்துரைக்கிறது. பெண்ணைப் பள்ளியில் சேர்ப்பதிலிருந்து, அவள் திருமணமாகி விவாகரத்து பெற்றாலும்சரி, அனைத்து நிலைகளிலும் அவளின் உணர்ச்சிகள் தூண்டப்படாமல் கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்பதிலேயே 'இசுலாம்' முழுகவனம் செலுத்துகிறது என்பதை 'சல்மா' பதிவுசெய்கிறார்.. மேலும், இசுலாமியப் பெண்களுக்கு பல உரிமைகள் கொடுக்கப்பட்டாலும் அவற்றை பயன்படுத்தும் போது அவை கானல்நீராகிவிடுகின்றன என்பதையும் இப்புதினம் புலப்படுத்துகிறது. இவ்வாறு 'மனாமியங்கள்' புதினத்தின்வழி இசுலாமியப் பெண்களின் நிலையை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

குறிப்புநூல் பட்டியல்

1. அப்துல் சமது, மு. *இஸ்லாமியத் தமிழ்ப்புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 013, முதல் பதிப்பு – 2004.
2. சல்மா, *மனாமியங்கள்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் - 629 001, முதல் பதிப்பு – 2016.

3. செய்யது ராபியா ரோஷன், (தொ.ஆ.), *பெண்களுக்கான இஸ்லாமியச் சட்டங்கள்,* சாஜிதா புக் சென்டர், சென்னை – 600 001, முதல் பதிப்பு – 2004.
4. முகம்மது மைதீன் உலவி, மு.ஆ. *பெண்களுக்கு....! இஸ்லாம் கூறும் ஆலோசனை,* யாசிர் பப்ளிகேஷன்ஸ், மதுரை – 625 011, முதல் பதிப்பு – 2019
5. ஜாகிர் நாயக், *இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமை,* முஹம்மத்(தமிழில்), சாஜிதா புக் சென்டர், சென்னை – 600 001, முதல் பதிப்பு – 2021.
6. ஜைனுல் ஆபிதீன், பீ. *இஸ்லாம் பெண்களின் உரிமையைப் பறிக்கிறதா?,* நபீலா பதிப்பகம், சென்னை – 600 001, முதல் பதிப்பு – 2010.

********* ********* ********** ********* ********* ********** ********** **********